பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 08 2024 **MONDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சாதாரண மக்களுக்கு நீதி வழங்குவது எளிமையானதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- திண்டுக்கல் மாவட்டத்தில் பட்டாசு ஆலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்டும் என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- தமிழக அரசு சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழ் முருகன் மாநாட்டில், 143 முருகன் திருக்கோவில்களில் சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- பகவான் கிருஷ்ணர் அவதரித்த தினமான இன்று கிருஷ்ண ஜெயந்தி நாளாக நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.
- யு.எஸ். ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

>>>>><<<<<

சாதாரண மக்களுக்கு நீதி வழங்குவது எளிமையானதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்றத்தின் 70வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி, ஜோத்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், தேவையற்ற சட்டங்களை களைந்து, புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நீதி துறையில் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும், புதிய சட்டங்கள் மற்றும் சீர்த்திருத்தங்கள் மூலம் புதிய இந்தியா படைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நீதித்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக, நீதிமன்றங்கள் மின்னணுமயமாக்கப்படுவது மிகச் சிறந்த உதாரணம் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் 18 ஆயிரம் நீதிமன்றங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

இதன் மூலம் சாதாரண மக்கள் அதிக அளவில் பயனடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசத்திற்கு முதலிடம் என்ற விதத்தில் உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இவ்விழாவில் ராஜஸ்தான் மாநில ஆளுநர் திரு. ஹரிபாபு கிருஷ்ணராவ் பாக்டே, முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா, உச்சநீதிமன்ற மூத்த நீதிபதி சஞ்சீவ் கண்ணா, மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால், ராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவத்சவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஆவிச்சிப்பட்டி கிராமத்தில் அனுமதியின்றி செயல்பட்டு வந்த தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் சுமார் 3.30 மணியளவில் இந்த பட்டாசு ஆலையில், வெடிமருந்து தயாரிக்கும் பணியின் போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

கோவை மாவட்டத்தில் புதிதாக 750 பேருக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி வழங்கினார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 6 ஆயிரம் பேர் புதிதாக குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்திருப்பதாகவும், அவர்களுக்கு விரைவில் குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கோவை மாவட்டத்தில் இதுவரை 11 லட்சத்து 42 ஆயிரம் பேருக்கு குடும்ப அட்டைகள் இருப்பதாகவும், இதன் மூலம் 34 லட்சம் பேர் பயன்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - முத்துசாமி 49 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் முதல்கட்டமாக 143 முருகன் திருக்கோவில்களில் சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் நடத்தப்படும் என்று அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அனைத்துல முத்தமிழ் முருகன் மாநாடு, பழநியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது.

இந்த மாநாட்டின் நிறைவு நாளான நேற்று, முருகன் திருக்கோவில்களில் ஓதுவார்களை நியமனம் செய்வது, அறுபடை வீடு திருக்கோவில்களில் முருக பக்தி இலக்கியங்களை மையப்படுத்தி திருவிழாக்களை நடத்துவது, பழநியில் தமிழர் சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைப்பது, முத்தமிழ் முருகன் ஆய்வு மையம் அமைப்பது உள்ளிட்ட 21 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

>>>>><<<<<

மலையாள திரைப்பட உலகில் எழுந்துள்ள பாலியல் புகார்கள் குறித்து விசாரிக்க காவல்துறை ஐஜி. தலைமையிலான குழுவை கேரள அரசு அமைத்துள்ளது.

சமீபத்தில் இந்தக் குழுவில் நான்கு பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட 7 பேர் இடம்பெற்றுள்ளனர்.

மலையாள திரைப்பட துறையில் சமீபகாலமாக எழுந்துள்ள பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க நீதிபதி ஹேமா தலைமையிலான குழு அமைக்கப்பட்டு, விசாரணை நடைபெற்றது.

இதனையடுத்து, சமீபத்தில் இந்தக் குழு மலையாள திரைப்படத் துறையில் நிகழும் பாலியல் குற்றங்கள் தொடர்பாக விரிவான அறிக்கையை கேரள அரசிடம் தாக்கல் செய்தது.

அதன் விவரங்களை அம்மாநில அரசு சமீபத்தில் வெளியிட்டது.

இது மலையாள திரைப்பட உலகில் மட்டுமல்லாமல் கேரள மக்களிடம் அதிர்வலைகளை உருவாக்கியது.

>>>>><<<<<

பகவான் கிருஷ்ணர் அவதரித்த தினமான இன்று கிருஷ்ண ஜெயந்தி நாளாக நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, கிருஷ்ணர் ஆலயங்களில் பல்வேறு சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கிருஷ்ணர் பிறந்த உத்தரபிரதேச மாநிலம், மதுராவில் உள்ள பிருந்தாவன் விழாக்கோலம் பூண்டுள்ளது.

அங்குள்ள கிருஷ்ணர் கோவில் வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

ஏராளமான பக்தர்கள் அங்கு வழிபாடு செய்வதற்காக குவித்துள்ளனர்.

அதேபோல, ஹரே கிருஷ்ணா ஆலயங்களில் சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பெருமாள் மற்றும் விஷ்ணு கோவில்களில் கிருஷ்ண ஜெயந்தி உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

கோகுலாஷ்டமியை ஒட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர் உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் போதனைகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் பின்பற்றி மகிழ்ச்சி காணும் நன்னாள் கோகுலாஷ்டமி என்று குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீமத் பகவத் கீதை, மனித சமுதாயத்திற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளதாக திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தெய்வீக அன்பு, ஞானம், நீதி ஆகியவற்றை உள்ளடக்கிய கிருஷ்ண ஜெயந்தி, ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த நன்னாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றி, ஈகை பண்பு ஆகியவற்றை மனிதகுலத்திற்கு எடுத்துரைக்கும் நாளாக இந்நாள் அமைந்துள்ளது என்றும் குடியரசு துணைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மேட்டுப்பாளையத்திலிருந்து இயக்கப்படும் நீலகிரி மலை ரயில் சேவை, இம்மாதம் 31ஆம் தேதிவரை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி அதிகாலை பெய்த கனமழை காரணமாக, மேட்டுப்பாளையம் – உதகை இடையேயான ரயில் பாதையில் மண் சரிவு ஏற்பட்டு மலை ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

அதன் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

திட்டமிட்டபடி சீரமைப்பு பணிகள் நிறைவடையாத நிலையில், மேட்டுப்பாளையம் – உதகை இடையேயான மலை ரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக ஏற்கனவே ரயில்வே நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், நீலகிரியில் கனமழை எச்சரிக்கை மற்றும் சில இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால். இம்மாதம் 31ஆம் தேதி வரை மலைரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

பிரேஸில் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Mauro Vieira** நான்கு நாள் பயணமாக நேற்று மாலை புதுதில்லி வந்துள்ளார்.

>>>>><<<<<

இந்தியாவின் முதல்நிலை போர்க்கப்பலான ஐஎன்எஸ்-மும்பை மூன்று நாள் பயணமாக இன்று இலங்கை செல்கிறது.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதை ஒட்டி, பிஜேபியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது

>>>>><<<<<

திரு.வி. கல்யாண சுந்தரனார் பிறந்த தினத்தை முன்னிட்டு, மதுரவாயல் அருகே அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு, மாநில அமைச்சர்கள் மரியாதை செலுத்தவுள்ளனர்.

>>>>><<<<<

தென்காசியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு அமைதிப் பேரணி நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இறைச்சிக்காக வன விலங்குகளை வேட்டையாடிய இருவரை, வனத்துறையினர் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

யு.எஸ். ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் சார்பில் சுமித் நாகல், ரோஹன் போபண்ணா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

யு.எஸ். ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் பிரிவில் நடப்பு சாம்பியனான செர்பியாவின் நோவோக் ஜோகோவிச், ஸ்பெயின் நாட்டின் **Carlos Alcararaz,** உலக தரவரிசைப் பட்டியிலில் முதலிடத்தில் உள்ள இத்தாலியின் **Jannik Sinner** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் பிரிவில் அமெரிக்காவின் **Coco Gauff,** போலந்தின் **Iga Swiatek,** கஜகஸ்தானின் **Elina Rybakina,** ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இரண்டுமுறை வெற்றிபெற்ற **Aryna Sabalenka** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

காத்மாண்டுவில் நடைபெற்று வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் ஆட்டத்தில் இந்திய அணி – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

திண்டுக்கல்லில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டிகளில் 200க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்று, தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

>>>>><<<<<